

# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் ஏற்கெனவே தொடங்கி நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக அடுத்து நடைபெறவுள்ள தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 11.7.2025 | சரவணம்பட்டி பகுதி | அஞ்சுகம் நகர் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 2 | | சின்னவேடம்பட்டி பகுதி | சின்னவேடம்பட்டி சந்திப்பு | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 3 | | விளாங்குறிச்சி பகுதி | விளாங்குறிச்சி நியாயவிலைக் கடை அருகில் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 4 | | காளப்பட்டி பகுதி | நேரு நகர் பேருந்து நிறுத்தம் | சேலம் சுஜாதா ரா.குமுத ஸ்ரீ |
| 5 | 13.7.2025 | கவுண்டம்பாளையம் பகுதி | அசோக் நகர் கீழ்ப்பகுதி | கோவை துரைமுருகன் சி.கவின்குமார் |
| 6 | | இடையர்பாளையம் பகுதி | அண்ணா திடல், இடையர்பாளையம். | கோவை துரைமுருகன், சி.கவின்குமார் |
| 7 | 14.7.2025 | கூடலூர் நகரம் | கவுண்டம்பாளையம் பாயிண்ட் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 8 | | வீரபாண்டி பேரூர் | விநாயகர் கோயில் திடல் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 9 | | பெரியநாயக்கன் பாளையம் பேரூர் | ஐந்து முக்கு, பெரியநாயக்கன் பாளையம் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 10 | | நரசிம்மநாயக்கன் பாளையம் பேரூர் | பேருந்து நிலையம், நரசிம்மநாயக்கன் பாளையம் | குமரி பிரபாகரன் ப.விஜயராஜ் |
| 11 | 17.7.2025 | ஆலாந்துறை பேரூர் | கருமாரியம்மன் கோயில் மைதானம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 12 | | தென்கரை பேரூர் | கரடிமடை | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 13 | | பூலுவப்பட்டி பேரூர் கழகம் | கிளியகவுண்டன் பாளையம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 14 | | பேரூர் பேரூர் | பேரூர் கோயில் மைதானம் | கரூர் முரளி ஏ.ஆட்லின் |
| 15 | 18.7.2025 | பெரியநாயக்கன் பாளையம் கிழக்கு ஒன்றியம் | காந்தி குடியிருப்பு, அசோகபுரம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 16 | | சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் | லட்சுமி கார்டன், கொண்டயம்பாளையம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 17 | | சர்க்கார் சாமக்குளம் பேரூர் | பேருந்து நிலையம், சர்க்கார் சாமக்குளம் | கரூர் முரளி ப.விஜயராஜ் |
| 18 | | இடிகரை பேரூர் | ஐ.ஓ.பி. வங்கி அருகில், இடிகரை. | கரூர் முரளி ப.விஜயராஜ் |

**கோயம்புத்தூர்**
நாள் : 03.07.2025

கலைஞர் 100 1924 - 2023









பம்மல் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்பி, கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம் பி ,காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி , காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் அ.தமிழ்மாறன், பகுதிகழக செயலாளர்கள் இ.எஸ். பெர்னாட், ஆர்.நடராஜன், ஆர்.சுரேஷ் ,ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி பொதுக்குழு உறுப்பினர்கள் க. தேவேந்திரன் மூ.ரஞ்சன், தாம்பரம் மாநகர துணை செயலாளர் நரேஷ் கண்ணா, பொன். சதாசிவம், மாவட்ட இளைஞர் அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்திய பிரபு, மாவட்ட கழக பிரதி எஸ்.கே. நெப்போலியன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

### இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

# மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## மேயர் பிரியா பார்வையிட்டு ஆய்வு! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,ஜூலை.04-

இராயபுரம் மண்டலத்தில் வார்டு 50, 51, 52, 53 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள கால்நடை காப்பகம், வண்டல் மண் சேகரிப்புத் தொட்டிகளைத் தூர்வாருதல், இராபின்சன் விளையாட்டு மைதானம், மழைநீர் வடிகால் கட்டும் பணி, போஜராஜன் நகர் சரங்கப்பாதை பணி, பொதுக் கழிப்பிடம் ஆகியவற்றினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (03.07.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், பேசின் பிரிட்ஜ் சாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடை காப்பகத்தை மேயர் பார்வையிட்டு, அங்கு கால்நடைகள் முறையாக பராமரிக்கப்படுவதை ஆய்வு செய்தார். இக்காப்பகத்தில் கூடுதலாக கால்நடைகளைப் பராமரிக்கும் வகையில் காலியாகவுள்ள 14,972 சதுரடி பரப்பில் கால்நடை காப்பகத்தினை விரிவு படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், பேசின் பிரிட்ஜ் சாலையில் மழைநீர் வடிகாலில் உள்ள வண்டல் மண் சேகரிப்புத் தொட்டியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வாகன இயந்திரம் மூலம் ( Sucker lorry) வண்டல் மண் தூர் வாரப்படுவதைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வார்டு - 50, தெற்கு மாதா சாலையில் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து முடிக்கப்பட வேண்டிய இதரப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் இப்பகுதியில் கைவிடப்பட்டு நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை அப்புறப்படுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு - 51ல் ரூபாய் 97 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள இராபின்சன் விளையாட்டு மைதானத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இம்மைதானத்தின் முன்பகுதியில் பள்ளமாக உள்ள இடத்தினை மழைநீர் தேங்காமல் மண் போட்டு நிரவிடவும், இம்மைதானத்தில் உள்ள மேடைப் பகுதியில் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, கல்லறை சாலையில், 52 ஆவது வார்டு அலுவலகத்திற்கு அருகில் உள்ள பொதுக் கழிப்பிடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, கழிப்பறைகளை சுத்தமாகப் பராமரித்திட பணியாளரிடம் அறிவுறுத்தினார். பின்னர், 52 ஆவது வார்டு இரயில்வே சந்திக் கடவு அருகில் போஜராஜன் நகரையும் கண்ணன் நகரையும் இணைக்கும் வகையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதைப் பணிகளைப் பார்வையிட்டு, இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பா. வேளாங்கண்ணி, ரா.சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இராயபுரம் மண்டலம், வார்டு 50, தெற்கு மாதா சாலையில் மூலதன நிதி ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் மேயர் திருமதி ஆர்.பிரியா , ஆய்வு செய்து விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, .ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் .பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ரா.சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் சார்பில் மாதவரம் தெற்கு பகுதி 32 வட்டத்தில் வட்ட செயலாளர் எம் சரவணன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் எஸ் சுதர்சனம் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி உரையாற்றினார் உடன் மாவட்ட துணை செயலாளர் டி ராமகிருஷ்ணன் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் பகுதி செயலாளர் ஜி துக்காராம் சோழவரம் நீ வே கருணாகரன் மாமன்ற உறுப்பினர் புத்த கரம் இ ஏழுமலை வட்ட செயலாளர் டி சுந்தரம் திருமலை ஜி துரைசாமி இ மோகன் விஜயலட்சுமி ஆனந்தன். தேவி கௌதமன் சிவில் எம் செல்வம் தே ரமணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



இராயபுரம் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட எஸ்.என். செட்டி தெருவில் 3 கோடியே 32 லட்சம் மதிப்பீட்டில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா.மூர்த்தி மழைநீர் முன்னெச்சரிக்கையாக மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டினார். உடன் இராயபுரம் கிழக்கு செயலாளர் இரா.செந்தில்குமார் – 50வது வட்டம் மாமன்ற உறுப்பினர்கள் ஆர்.சுரேஷ்குமார் –, AE மேனகா – சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.

